Registered as a Newspaper

நம்பிக்கையுடன
சேமிக்க
'ஷப்ரு 'வின்
துணையை
நாடுங்கள்!
SHABRA
207, மின்சார
நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: — 22073

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ-1/=

நிதித்துறையில்
நாணயம் மிக்க
நண்பன்
SHABRA
61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு-4.
தொலைபேசி: 589310
500576

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆடு மார்கழி மீ 27 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி ஆகிர் பிறை 29 (11-01-1986) UTHAYAN – A LIVELY TAMIL DAILY கதிர்:-46

# இராமேஸ்வரம் கப்பல் சேவை பெப்ரவரி முதல்

## ராஜீவின் நிபந்தனையை முறியடிக்கும் முயற்சியா?

–கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர்–

கொழும்பு,ஜன.11

தலைமன்னருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் நடக்கும் இலங்கை-இந்திய கப்பல் சேவை பெப்ரவரி முதலாம் திகதி மீண்டும் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு – தலைமன்னார் ரயில் சேவையும் பெப்ரவரி முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இத்தகவல்களை போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம்.எச்.முகம்மது வெளியிட்டார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக இலங்கையினால் நிறுத்தி வைக்கப்பட்ட கப்பல் சேவை, ரயில் சேவை ஆகியவற்றை மீண்டும் ஆரம்பிக்க இலங்கை அரசு திடீர் முடிவு எடுத்தமை அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது

### ராஜீவின் நிபந்தனை

இந்தியக் குடியுரிமை பெற்றவர்களை விமானம் மூலம் இந்தியாவுக்கு அனுப்பி வைக்க இலங்கை தீவிர முயற்சிகளை மேற்கொண்டது அத்தருணத்தில்தான்கடவுச் சீட்டுக்களுடன் தயாராக இருக்கும் இந்தியக் குடியுரிமை பெற்ற மலையகத் தமிழரை,

இலங்கைத் தமிழர் பிரச்சினை தீரும்வரை திருப்பி எடுக்க மாட்டோம் என்று இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அறிவித்தார்.

### பதிலடி

அதற்குப பதிலடி கொடுக்குமாப்போன்றே இலங்கை அரசின் இந்த முடிவு அமைந்துள்ளதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

கப்பல், ரயில் சேவைகளை ஆரம்பித்து விட்டால் தாயகம் திரும்பத் தயாரான நிலையில் இருக்

(4ம் பக்கம் பார்க்க)



முச்சந்தி முரளி

உவை கப்பல் சேவையை ஆரம்பிக்கிறதாகச் சொன்னாலும் கப்பலை ஓடுற "இண்டியன் சிப்பிங்" கம்பனியின்ரை நாணயக்கயிறு இந்திய அரசாங்கத் திட்டை இருக்குதெண்டதை மறந்திட்டினம் போலை!

### சுபநேரம்

11 - 01 - 1986

சனிக்கிழமை
சுபநேரம்
3.33 முதல் 5-03 வரை
ராகு காலம்
9 33 முதல்11-03வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

# வெள்ள அகதிகள் பட்டினி கிடக்கும் அபாயத்தில்...!

## மட்டுநகரை உலுக்கும் உணவுத் தட்டுப்பாடு

–மட்டகளப்பு மாவட்டச் செய்தியாளர்–

மட்டக்களப்பு, ஜன. 11

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் ஒன்றரை லட்சம் மக்கள் பட்டினி அபாயத்தை எதிர் நோக்கியிருக்கிறார்கள்.

இவர்கள் அனைவருக்கும் நேற்று (வெள்ளிக்கிழமை) முதல் உணவுப் பொருள்களை பங்கீட்டு அடிப்படையில் வழங்கும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது.

ஆனால் அரச மேலிடம் உத்தரவிட்டதுபோல, பங்கீட்டு உணவுப் பொருள்களை வழங்குவதற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரசாங்க களஞ்சியங்களிலோ அல்லது கூட்டுறவு கடைகளிலோ போதிய கையிருப்பு இல்லை.

அதனால் தனியார் கடைகளில் இந்தப் பொருள்களை கொள்வனவு செய்து விநியோகிக்கும்படி சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. எம். அந்தோனிமுத்து உத்தரவிட்டிருக்கிறார்.

அடுத்தடுத்து நிகழ்ந்த கொள்ளைச்சம்பவங்களைத் தொடர்ந்து களஞ்சியங்களில் உணவுப் பொருட்களைச் சேமிக்கும் முறை மட்டக்களப்பில் கைவிடப்பட்டிருந்தது.

இதனாலேயே தற்போது அத்தியாவசிய உணவுப் பொருள்களான அரிசி, தேங்காய், மரக்கறிகள், உப உணவுப் பொருள்கள் ஆகியவற்றிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

மட்டக்களப்பை நோக்கி வரும் சகல நெடுஞ்சாலைகளும் நீரில் மூழ்கியிருக்கின்றன. இதனால் உணவுப் பொருள்களை வெளியிலிருந்து கொண்டுவருவதற்கு முடியாத நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

கடல் மார்க்கமாகவேனும் உணவுப் பொருள்களை அவசரமாகப் பெற்றுக் கொள்ளுவதற்கு மட்டக்களப்பு அரசாங்க அதிபர் முயற்சித்து வருகிறார்.

இது தொடர்பாக சமூக சேவை அமைப்புடனும் அவர் தொடர்பு கொண்டுள்ளார்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சகல அரசாங்க ஊழியர்களுக்கும் 500 ரூபா சம்பள முற்பணம் வழங்கும்படி அரசாங்க அதிபர் பணிப்பு விடுத்திருக்கிறார்.

# நேருக்கு நேர் மோதல் முல்லைத்தீவில்

## நான்கு படை வீரர் பலி
## சூடுபட்டு 13 பேர் மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 11

முல்லைத்தீவு உடையார் கட்டுப் பகுதியில் வியாழக்கிழமை இரவு ஆயுதப் படையினருக்கும் போராளிகளுக்கும் இடையில் நேரடித் தாக்குதல் நிகழ்ந்தது.

சுமார் இரண்டரை மணி நேரம் நடைபெற்ற இந்தத் தாக்குதலில் நான்கு ஆயுதப்படை வீரர்கள் கொலைப்பட்டதாகவும் நான்கு வீரர்கள் படுகாயம் அடைந்ததாகவும் நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது

பொது மக்கள் 13 பேர் கொல்லப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

தொழிலாளர் குடும்பம் ஒன்று கடத்தப்பட்டதாகவும்—

அதைத் தேடி பாதுகாப்புப் படையினர் போனபோதே மோதல் உருவானது என்றும் கூறப்பட்டது.

போராளிகளின் முகாம் ஒன்றுக்கு முன்பதாக மோதல் ஏற்பட்டது.

ஹெலிக்கொப்டரிலிருந்தும் சரமாரியாக

(4ம் பக்கம் பார்க்க)

### பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

கொழும்பு, ஜன.11

முல்லைத்தீவு உடையார் கட்டு தாக்குதல் சம்பவம் தொடர்பாக பாதுகாப்புஅமைச்சு பின்வருமாறு தெரிவித்தது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின்முல்லைத்தீவு மாவட்டத்தின் முக்கிய முகாம் ஒன்று தாக்கப்பட்டது.

இங்கு நடந்த நேரடி மோதலில் 13தீவிரவாதிகள் கொலையுண்டனர். மற்றும் பலரைச் சூட்டுக் காயங்களுடன் இழுத்துச் சென்று விட்டனர்.

பிரஸ்தாப முகாமில் பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப் பட்டன.

படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டார். இருவர் காயமடைந்தனர்.

## மட்டக்களப்பில் வெள்ள நிலைமை மேலும் மோசமாகிறது

மட்டக்களப்பு, ஜன. 11

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளநிலைமை மேலும் மோசமடைந்திருக்கிறது.

ஒருவர் வெள்ளப் பெருக்கிற்குப் பலியானார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல குளங்களும் நிரம்பி வழிகின்றன.

உன்னிச்சை, நவகிரி நகர், ருகம், வாகனேரி ஆகிய இடங்களில் குளங்கள் நீரால் மூடப்பட்டிருக்கின்றன.

சத்துருக்கொண்டான் சர்வோதய பண்ணைக் காவலாளி கன்னியன் செல்லையா வெள்ளப் பெருக்கிற்குப் பலியானார்.

பண்ணையை அடுத்துள்ள குளத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கிலேயே இவர் சிக்கியதாகக் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு சந்தையுட்பட நகரின் பல

(4ம் பக்கம் பார்க்க)

### 5 லட்சம் மக்கள் அகதிகள்

கொழும்பு, ஜன. 11

கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் மழை காரணமாக சுமார் 5 லட்சம் பேர் வீடிழந்து அகதிகளாகி விட்டதாக அரசாங்கம் நேற்று அறிவித்தது.

## சிறையிலிருந்து தப்பி ஓடினர் சிங்கள இளைஞர்
### தென்னிலங்கையில் கைதான முதல் பயங்கரவாத சந்தேகநபர்

கொழும்பு, ஜன 11

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட முதலாவது சிங்கள இளைஞர் தப்பி ஓடி விட்டார்.

லெனின் அல்லது விஸ்வான் என்று அழைக்கப்படும் உதுவகே ஹென்றி பெரேரா நீர்கொழும்புச் சிறையில் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

மற்றும் இரண்டு கைதிகளுடன் சேர்ந்து லெனின் வெள்ளிக்கிழமை அதிகாலை சிறைச்சாலையில் இருந்து தப்பி ஓடி விட்டார்.

வத்தேகம பகுதியில் சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னர் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து லெனின் கைது செய்யப்பட்டார்.

இவர் இடதுசாரிக் கட்சி ஒன்றின் உறுப்பினர்.

கடந்த எட்டாம் திகதி கொழும்பு உயர் நீதிமன்ற நீதியரசர் எச். டபிள்யூ சேனநாயக்கா முன்னிலையில் இவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## தடை
### எதிர்க் கட்சிகளின் கூட்டத்திற்கு

கொழும்பு, ஜன. 11

வெள்ளவத்தையில் நேற்று முன்தினம் மாலை நடைபெறவிருந்த எதிர்க் கட்சிகளின் பொதுக் கூட்டத்திற்குப் பொலிஸார் அனுமதி அளிக்கவில்லை.

இதன் காரணமாகக் கூட்டம் கடைசி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டது.

இக் கூட்டத்தை லங்கா சமசமாஜக்கட்சி கம்யூனிஸ்ட்கட்சி, இலங்கை மக்கள் கட்சி ஆகியன கூட்டாக ஒழுங்கு செய்து இருந்தன.

## மக்கள் இப்போது சிறிமா பக்கம்
### அஸ்கிரிய பீடாதிபதி சொல்கிறார்

கொழும்பு, ஜன. 11

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஒரு புத்திசாலித்தனமான தேசியத் தலைவர் மக்கள் இப்போது அவர் பக்கம்.

கண்டி அஸ்கிரிய பீடாதிபதி சந்தானந்த தேரோ இப்படிச் சொன்னார்.

தலதா மாளிகைக்கு விஜயம் செய்த பின்னர், திருமதி. பண்டாரநாயக்கா அஸ்கிரியாவுக்குச் சென்று பீடாதிபதியைச் சந்தித்தார்.

அச்சமயமே மேற்கண்டவாறு புகழாரம் சூட்டப்பட்டது.

"சிறிய குற்றத்திற்காகப் பலமான தண்டனை பெற்றவர் திருமதி. பண்டாரநாயக்கா.

"தனது ஆட்சிக் காலத்

(4ம் பக்கம் பார்க்க)

# ஆலயம் சென்ற பக்தர்களுக்கு திடீரென வந்து விழுந்தது சூடு!

## தொண்டமானாற்றில் பதற்றம்

யாழ்ப்பாணம்,ஜன.11

தொண்டமானாறுப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் 7பேர் காயமடைந்தனர்.

செல்வச்சந்நிதி ஆலய பூஜைக்குச் சென்றவர்களே காயமடைந்தவர்கள்.

60 வயது வயோதிபர் கதிரவேலு செல்வராஜா யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

ஏனைய ஆறுபேரும் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அனைவரும் பக்தர்கள்.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

தொண்டமானாறு முகாமிலிருந்து நேற்றுக் காலை 7 மணியளவில் ஆயுதப்படையினர் நடைபவனியாக தொண்டமானாறு சந்திக்கு அருகேவந்தனர்.

அச்சமயத்தில் பல குண்டுகள் வெடித்தனவாம்.

இதைத் தொடர்ந்து நடைபவனியாக வந்த ஆயுதப்படையினர் சுடத் தொடங்கினர்.

தொண்டமானாறுஇரா

(4ம் பக்கம் பார்க்க)

### சாமியைக் கும்பிட்டு திரும்பியபோது சூடு
#### காயமடைந்தவர் சொல்லுகிறார்

நல்லூர், ஜன 11

சாமியைக் கும்பிட்டு விட்டுத் திரும்பினேன். எனது காலைத்துளைத்தது ஒரு குண்டு.

நான் அந்த இடத்திலேயே விழுந்துவிட்டேன்.

நேற்றுக்காலை 6 மணியளவில் தொண்டைமானாறு சந்நிதி கோவிலில் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்கான வயோதிபரான கதிரவேலு செல்வராசா (61 வயது) இப்படிக் கூறினார்.

அவர் தறபோது யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

தொண்டைமானாறில் சம்பவம் பற்றி அவர்

(4ம் பக்கம் பார்க்க)

## லலித் - தொண்டா இன்று சந்திப்பு

கொழும்பு, ஜன.11

அமைச்சர் தொண்டமான், இன்று தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியைச் சந்தித்துப் பேச்சு நடத்த உள்ளார்.

இந்திய விஜய , பிரதமர் ராஜீவுடன நடத்திய பேச்சுக்களின்விவரங்கள், பிரார்த்தனை இயக்கம் ஆகியவைபற்றி விரிவாக இருவரும் பேச்சுக்கள் நடத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அமைச்சர் தொண்டமான், நேற்று இரவு சுமார் 10·30 மணியளவில் சென்னையில் இருந்து கொழும்பு வருவதாக

(4ம் பக்கம் பார்க்க)

# ராஜினாமா!

## சிவத்தம்பி, சிவபாலன் கண்காணிப்புக் குழுவிலிருந்து

கொழும்பு, ஜன 11

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிலிருந்து பேராசிரியர் கா- சிவத்தம்பியும் திரு க. சிவபாலனும் ராஜினாமாச் செய்துவிட்டார்கள்.

வியாழக்கிழமை (9-1-86) இரவு இருவரும் தங்கள் ராஜினாமாக் கடிதங்களை கண்காணிப்புக்குழுச் செயலாளர் நாயகம் திரு. பீலிக்ஸ் டயஸ் அபயசிங்காவிற்கு அனுப்பிவைத்தனர்.

ராஜினாமாக் கடிதங்கள் ஜனாதிபதிக்கு விலாசமிடப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ஜெயவர்த்தன வெளியூரில் இருப்பதால், கடிதங்கள் அவரிடம் கையளிக்கப்படவில்லை.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் பொதுமக்களைக்

(4ம் பக்கம் பார்க்க)

### சுதந்திரபுரத்தில் தேடுதல் வேட்டை

யாழ்ப்பாணம் ஜன, 11

கிளிநொச்சி மாவட்டத்தில் சுதந்திரபுரம் பகுதியில் ஆயுதப்படையினர் பெரும் தேடுதல் வேட்டையை நடத்தினர். ஹெலிக்கொப்டர் உதவியுடன் பல கவச வாகனங்களில் சென்ற ஆயுதப்படையினர் இதில் ஈடுபட்டனர்.

துப்பாக்கிப் பிரயோகமும் இடம் பெற்றது.

நேற்றுக் காலை முதல் இச்சம்பவம் இடம் பெற்றது. 15 பேர் கைது செய்யப்பட்டனர். 5 பொது மக்கள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்கள்.

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடிகர் குள்ளமணிக்கு எம். ஜி. ஆர். வீடு பரிசு

''வீட்டு வசதி வாரிய வீடு வேண்டும் என்று முதலமைச்சர் எம். ஜி. ஆரிடம் கேட்டேன். உடனேயே சொந்த வீடு ஒன்றைக் கொடுத்து விட்டார்''

நடிகர் குள்ளமணி இப்படிச் சொன்னார்.

அவர் மேலும் கூறுகையில் ''நடிக்க வருவதற்கு முன்னால் நான் ஜெய் சார் வீட்டில் உதவியாளகை இருந்தேன். ஒரு பிரபல நடிகர் (ஜெய்) தனது வீட்டில் செல்லப்பிள்ளையாக என்னை வளர்த்தார்.

தினசரி சினிமா

மாபெரும் நடிகரும், புரட்சித்தலைவருமான எம். ஜீ. ஆரோ எனக்குச் சொந்த வீட்டையே கொடுத்து விட்டார்.

''வீட்டு வசதி வாரிய வீடு வேண்டும்'' என்று முதல்வரைச் சந்தித்து கேட்டேன். எல்லாம் 'ஓகே' ஆகி விட்டது. தங்களின் ராசியான கரங்களால் எனது வீட்டுக் கிரஹப்பிரவேசம் நடக்க வேண்டும் என்று முதல்வரை வேண்டினேன்.

கே. கே. நகரில் உள்ள எனது வீட்டின் கிரஹப்பிரவேசத்திற்கு வர முதல்வர் சம்மதம் தெரிவித்து விட்டார்.

எனக்கோ தலைகால் புரியவில்லை. ஒரே குதூகலம். பேச முடியவில்லை. கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கி விட்டது.

இச்சந்தர்ப்பத்தில் முதல்வர் என்னைத் தட்டிக் கொடுத்தவாறே ''எப்போ கல்யாணம்'' என்றார்.

''பொண்ணு ரெடி. நீங்க எப்ப தலைமை தாங்க டேட் கொடுக்கிறீங்களோ அப்ப தான் எனக்குக் கல்யாணம்!'' என்றேன் நான்.

அதற்கும் முதல்வரின் பதில் புன்னகையாகவே இருந்தது'' என்றார் குள்ளமணி குஷியாக!

## றேகன்- கொர்பச்சேவ் இரண்டாவது சந்திப்பு
### திகதி குறிக்கப்படவில்லை என்கிறார் ஜனாதிபதி றேகன்

வாஷிங்டன், ஜன. 10

றேகன் –கொர்பச்சேவ் இரண்டாவது சந்திப்பு உச்சி மாநாட்டுக்கான திகதி இன்னும் குறிக்கப்படவில்லை.

இந்தத் தகவலை ஜனாதிபதி றேகன் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்; எதிர்வரும் ஜூன் மாதத்தில் உச்சி மாநாட்டை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் மறுதரப்பிலிருந்து அடுத்த செப்டம்பர் மாதம் வரையும் இது பின்போடப்பட வேண்டுமென கேட்கப்பட்டுள்ளது.

ஏன் இப்படிப் பின்போட வேண்டுமென்ற காரணத்தை அவர்கள் தெரிவிக்கவுமில்லை. எந்தத் திகதியும் குறிப்பிடப்படவுமில்லை என்றார்.

## மனைவியின் கொடுமை; கணவன் தற்கொலை
### திருமலையில் இப்படிச் சம்பவம்

திருகோணமலை, ஜன. 11

மனைவியின் கொடுமை தாங்காது 31 வயதான செல்வகுமார் நஞ்சு குடித்து தற்கொலை செய்து கொண்டார்.

திருமலை நகரில் இச் சம்பவம் புதன் இடம் பெற்றது.

மரண விசாரணையில், மனைவிக்கும் இவருக்கும் அடிக்கடி சச்சரவு இருந்து வந்தது என்று சொல்லப்பட்டது.

மனைவியின் கொடுமை தாங்காது அவர் தற்கொலை செய்து கொண்டதாக அவரது உறவினர்கள் விசாரணையில தெரிவித்தனர்.

தற்கொலை என்று திடீர் மரண விசாரணை அதிகாரி ஜனாப். அலி அக்பர் தீர்ப்பளித்தார்.

## மரங்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையைக் குறைக்க ஆணையாளர் அப்பீல்

யாழ்ப்பாணம், ஜன 11

யாழ்ப்பாணம் நகரில் உள்ள நான்கு வீதிகளைச் சேர்ந்த மரங்களுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையைக் குறைத்து ஆயுள் சிறைத் தண்டனையாக்குமாறு அப்பீல் செய்யப்பட்டுள்ளது.

ஆம்! மரங்களைத் தறிக்காது கொப்புகளை மட்டும் வெட்டிவிடும் ஆயுள் தண்டனையை நிறைவேற்ற அனுமதிக்குமாறு அப்பீல் செய்திருப்பவர் மரங்களின் பராமரிப்புக்குப் பொறுப்பான மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம்.

நூல்நிலைய வீதி, கே. கே. எஸ்.—தபாற் கந்தோர் வீதி, புல்லுக்குளம் வீதி, பண்ணை வீதி ஆகியவற்றில் உள்ள மரங்களை வெட்டுமாறு பாதுகாப்பு அமைச்சு திரு. சிவஞானத்தைக் கேட்டிருந்தது தெரிந்ததே.

## சுவிசில் தமிழர் நிலை: புதிய தகவல் எதுவும் தமக்கு வரவில்லை என்கிறார் இங்குள்ள தூதுவர்

கொழும்பு, ஜன. 11

அரசியல் தஞ்சம் பெறத் தகுதியற்ற தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் முடிவை அமுல நடத்தப் போவது பற்றி சுவிட்சர்லாந்தில் இருந்து எனக்கு எதுவித புதிய தகவலும் வரவில்லை.

இலங்கையில் உள்ள சுவிஸ் தூதுவர் திரு. ஏ. எல். கௌஸ்ஸன் இவ்வாறு தெரிவித்தார்.

புகலிடம் மறுக்கப்படும் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்ப சுவிஸ் அரசு நடவடிக்கை எடுப்பதாக வந்த செய்தி பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டபோதே சுவிஸ் தூதுவர் மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது;

''அரசியல் தஞ்சம் கோருதவர்களைத் திருப்பி அனுப்புவது என்ற முடிவை சுவிஸ் அரசு ஒரு வருடத்துக்கு முன்னரே எடுத்துவிட்டது''

அதை அமுல் நடத்துவதை ஒத்திப்போட்டு வந்தது. அந்தத் தீர்மானத்தை அமுல் நடத்துவது பற்றி சுவிஸ் அரசிடம் இருந்து எனக்கு எதுவித தகவலும் வரவில்லை.

திருப்பி அனுப்புவதற்கு முன்னர் இங்குள்ள நிலைமை பற்றி பார்வையிட சுவிஸ் தூதுக்குழு ஒன்று வந்தது.

அந்தக் குழு சுவிஸ் அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்தது பற்றியும் எனக்குத் தெரியாது.

இப்படி சுவிஸ் தூதுவர் திரு கௌஸ்ஸன் சொன்னார்.

### மரணம்

கொழும்பு, ஜன. 11

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் காவலுக்கு நின்ற விமானப் படை வீரர் ஒருவர், துப்பாக்கி சூடுதாக்கி மரணமானர்.

# தனியார்துறை வர்த்தகத்துக்கு இணக்கம்
### பாரத- பாகிஸ்தான் ஒப்பந்தம் கைச்சாத்து

புதுடில்லி, ஜன. 10

தனியார்துறை வர்த்தகத் தொடர்புகளைத் துவக்குவதற்கு பாகிஸ்தானும் பாரதமும் இணைவு கண்டுள்ளன.

இரு நாட்டு நிதி மந்திரிகளும் இதற்கான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளனர்.

பாரதத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் 42 பொருள்கள் விடயத்தில் தனியார் இறக்குமதித் துறைக்கு ஒப்பந்தம் வாய்ப்பளித்துள்ளது.

இதற்கு முன்பு இத்தகைய பொருள்களின் இறக்குமதியை பாகிஸ்தான் அரச வர்த்தகக் கூட்டுத்தாபனமே மேற்கொண்டு வந்தது.

1970ஆம் ஆண்டு தொடக்கம் பாகிஸ்தானுடனை வர்த்தக நடவடிக்கைகளில் திருத்தங்கள் எதுவும் புகுத்தப்படாமலே இருந்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய இறக்குமதியாளர் ஒருவர் தாம் வேறு எந்தவொரு நாட்டிலிருந்தும் இறக்குமதி மேற்கொள்ளும்போது கடைப்பிடிக்கும் அதே விதிகளை பாகிஸ்தான் இறக்குமதி விஷயத்திலும் கடைப்பிடிப்பதற்கு ஒப்பந்தம் வகை செய்வதாகக் கூறப்படுகிறது.

பாரத நிதி மந்திரி விஸ்வநாத் பிரதாப்சிங் பத்திரிகையாளர் மாநாடொன்றிற் பேசும்போது;

இருதரப்பு உறவுகளையும் சீர்ப்படுத்தும் முதலாவது நடவடிக்கை இதுவாகும் என்றார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்;

இந்த நடவடிக்கைகளின் முன்னேற்றத்துக்கு பொருளாதாரத் துறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது மிகவும் பயனுள்ளது.

இந்த வகையில் எமது விஜயம் ஆக்கபூர்வமான பயன்களை மேலும் அளித்துள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## பாரிஸ் நகரில் உடை அலங்கார காட்சி அகம்

பாரிஸ், ஜன. 10

பாரிஸ் பட்டினத்தை மீண்டும் ஒரு நாகரிகப் பெரு நகராக உயர்த்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்கான அரும் பொருட்காட்சியகம் ஒன்றையும் உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளதாக பிரான்சின் கலாசார துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

காட்சியகத்தின் மாடிக் கட்டடத்தின் 9 அடுக்குகளில் அழகான அலங்கார உடைகள் காட்சிக்கு வைக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த 18 ஆம் நூற்றாண்டு தொடக்கம் பரிசில் இருந்து வரும் உடை மோஸ்தர்கள் அங்கு சிறப்பிடம் பெறும்.

## லோங்கோவால் நினைவு விருது

சென்னை, ஜன. 10

ஹர்சாந் சிங் லோங்கோவால் நினைவு நிறுவன முதலாவது விருது, ஆசாரிய ஸ்ரீ சுசில் முன்ஜி மகராஜுக்கு வழங்கப்பட்டுள்ளது.

60 வயதான இந்த ஜெயின் மதகுருதான், பஞ்சாப் சமரசத் திட்டத்தை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தார்.

அகாலி தள் கட்சியையும் மத்திய அரசையும் இது விஷயத்தில் நெருக்கமாக இணைந்து பாடுபட உதவியவர்.

1 லட்சம் ரூபா பணமும் இந்த விருதுடன் அவருக்கு வழங்கப்பட்டது.

மறைந்த லோங்கோவாலின் பிறந்த தினம் அன்று இந்த விருது வழங்கப்பட்டது.

சீனாவில்

## தானிய உற்பத்தி பெரும் வீழ்ச்சி
### விவசாயிகள்மீது அரசுபாய்ச்சல்

பீகிங், ஜன. 10

சீனாவில் தானிய விவசாய உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

விவசாய தானிய உற்பத்தி வீழ்ச்சிக்கு விவசாயிகளே காரணம் என சீன அரசு குற்றம் சாட்டியுள்ளது.

விவசாயத்தை அசட்டை செய்யும் விவசாயிகளும் விளை நிலங்களை வேறு தேவைகளுக்கு உபயோகிப்பவர்களும் தண்டிக்கப்படுவார்கள் என அரசு எச்சரிக்கை செய்துள்ளது.

கடந்த 7 ஆண்டுகாலங்களில் முதல் முறையாக இந்த உற்பத்தி வீழ்ச்சி இப்பொழுது ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிறு தீவு ஒன்றுக்கு பூரண சுதந்திரம்

பார்படோஸ், ஜன. 10

193 சதுர கிலோ மீட்டர் விஸ்தீரணம் கொண்ட தீவு ஒன்று 1996 ஆம் ஆண்டில் பூரண சுதந்திரம் பெற உள்ளது.

அரூபா என்ற பெயர் கொண்ட இத்தீவு, கரிபியன் தீவுகளில் ஒன்று.

இதற்கு முன்னோடியாக நெதர்லாந்து சம்மேளனத்தில் இருந்து அரூபா, டிசம்பர் வாரக் கடைசியில் விலகிக் கொண்டது.

இது சம்பந்தமான வைபவம் ஒன்றில் அரூபாவின் தலைநகரான ஒரன்ஜ்ஸ்ரட்டில் டச்சுக் கொடி இறக்கப்பட்டு, அரூபா நாட்டுத் தேசியக் கொடியான சிவப்பு நட்சத்திரம் ஒன்றைக் கொண்ட நீல நிறக் கொடி ஏற்றப்பட்டது.

அரூபா நாடாளுமன்றக் கூட்டத்தைத் தொடர்ந்து திரு. ஹென்னி ஈமானை பிரதம மந்திரியாகக் கொண்ட அரசு பதவி ஏற்றது.

1996 ஆம் ஆண்டில் பூரண சுதந்திரம் பெறும் வரை, அரூபாவின் பாதுகாப்பு, வெளிவிவகாரங்களை டச்சு அரசாங்கமே கவனித்து வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வெளி உலகில்

## பாடசாலைகள் துவங்கும்போது கலவரங்கள் மூளலாம்
### தென் ஆபிரிக்க கறுப்பின பெற்றோர் கவலை

ஜோஹன்னர்ஸ்பேர்க், ஜன. 10

தென்னாபிரிக்க கறுப்பினப் பெற்றோர் தமது பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்றால் கலவரங்கள் மூளலாம் என அச்சம் தெரிவித்துள்ளனர்.

கேட்கப்பட்ட தவணைக்கு 20 நாட்களுக்கு முன்பே பாடசாலைகளைத் திறக்க வேண்டுமென்ற அரசின் விதிப்பே இந்த அச்சத்துக்கு காரணமாகத் தெரிவிக்கப்படுகிறது.

கறுப்பின மாணவர்கள் கடந்த இரண்டு வருடங்களாகப் பாடசாலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

''விடுதலைக்குப் பின் தான் படிப்பு'' என்று தெரிவித்து இந்தப் பகிஷ்கரிப்பில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இப்பொழுது பெற்றோர் தமது பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்று கல்வியைத் தொடர வேண்டுமென வற்புறுத்தி வருகிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்கள் தமது பகிஷ்கரிப்பை பின்போடுவதற்கு நிபந்தனைகள் விதித்துள்ளனர். ஜனவரி 28ஆம் திகதி தான் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதும் ஒரு நிபந்தனையாகும்.

நிபந்தனையுடன் பகிஷ்கரிப்பை பின்போட தமது பிள்ளைகளைத் தாம் தூண்ட முடியுமெனவும், எனினும் இதற்கு காலம் பிடிக்குமெனவும் பெற்றோர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கறுப்பர்களின் பிள்ளைகளுக்கு பாரபட்சமான கல்வியே வழங்கப்படுகிறது.

1950 ஆம் ஆண்டு தென் ஆபிரிக்க வெள்ளை ஆட்சியால் இந்தக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது.

மிக மோசமான கீழ்நிலைக் கல்வியே வழங்கப்படுவதாகத் தெரிவித்து இதற்கெதிராக தமது பகிஷ்கரிப்பை கறுப்பின மாணவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## தகவல் கொடுக்க தவறிய தாதிக்கு 4 வாரச் சிறை

கொழும்பு, ஜன 11

மட்டக்களப்பு ஆஸ்பத்திரித் தாதி ஒருவருக்கு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 4 வார சாதாரண சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

சீதாதேவி ரவீந்திரராசா என்பவர் மீதான வழக்கு கடந்த புதன் கிழமை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

1984 ஆம் ஆண்டு செப்டெம்பர் முதலாம் திகதிக்கும் 30 ஆம் திகதிக்கும் இடையில் களுவாஞ்சிக்குடியில் பொலிஸ் நிலையத் தாக்குதலில் சம்பந்தப்பட்ட இரண்டு தீவிரவாதிகள் பற்றித் தெரிந்து இருந்தும் தகவல் கொடுக்கத் தவறியதாக இக் தாதி மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்தே தண்டனை வழங்கப்பட்டது.

## மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

★ வடக்கில்

# இறக்குமதி செய்யப்பட்ட விதை பொருள்கள்
### தட்டுப்பாடின்றி கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஜன. 11

இறக்குமதி செய்யப்படும் விதை பொருள்களை வடக்கிலுள்ள விவசாயிகள் நடப்பாண்டில் தட்டுப்பாடின்றிப் பெறுவதற்கு கமநலசேவைத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டு உள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் தத்தம் கமநலசேவை நிலையங்களில தமது தேவைகளை முன் கூட்டியே பதிவு செய்து கொள்ள வேண்டும்.

கமநலசேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. க. பரமநாதன் இவ் வேண்டுகோளை விடுக்கு உள்ளார்.

பீட்ரூட், போஞ்சி, தக்காளி, பம்பாய் வெங்காயம் ஆகிய இறக்குமதி செய்யப்பட்ட விதை பொருள்களை விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

### ஒரே நாளில இரு தடவை கொள்ளை

யாழ்ப்பாணம், ஜன. 11

நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் ஒரே நாளில் இரண்டாவது தடவையும் இனந் தெரியாத நபர்கள் கொள்ளை அடித்தனர்.

12 பேர் ஆயுதங்களுடன் போய் காவலாளியைப் பயமுறுத்தி விட்டு, தச்சுக்கூடத்தினுள் புகுந்து அங்கு இருந்த காகிதாதிகள், மின் உபகரணங்கள் முதலியவற்றைக் கொள்ளை இட்டுச் சென்றனர்.

## அமைச்சரும் தமிழ் மக்களும் எதற்காகப் பறக்கிறார்கள்?
### ஒரு சுவையான விளக்கம்

பண்டத்தரிப்பு, ஜன 11

தமிழ் மக்கள் ஆஸ்பத்திரியில் மருந்து இல்லாமல் கடைகளில் அவற்றை வாங்க ஆலாய்ப் பறக்கிறார்கள். ஆனால் சிங்களப் பகுதிகளில அமைச்சர் அக்குப்பத்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களை வருத்தம் பார்க்க விமானத்தில் பறக்கிறார்.

இதுதான் எமது நாட்டு சமத்துவ சனநாயகம்.

இப்படிக் கூறினார் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் முன்னாள் உறுப்பினர் திரு சு. நடேசு. சங்கானை மேற்கு ஆரம்ப சுகாதார நிலையத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் மூளைக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டவர்களை வருத்தம் பார்க்க அரச செலவில் விமானத்தில் பறப்பு. ஆனால் தமிழ் பகுதி வைத்தியசாலைகளில் பல் பிடுங்குவதற்கு முன், முரசு விறைக்க ஏற்றப்படும் ஊசி மருந்து இல்லை. அதனல் ஏழைகளும் யார் காலைப் பிடித்தோ பணம் புரட்டி மருந்துக்கடைகளை நோக்கி அவசரமாய் (ஆலாய்) பறக்கிறார்கள்.

இதுதான் சனநாயக சமத்துவம்.

திரு. நடேசு தொடர்ந்து உரையாற்றுகையில் முன்பு தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் புற்று நோய்ப் பகுதிக்கான வைத்திய கலாநிதி சேவைக்கு இல்லாதிருந்தார். அந்த இடத்திற்கு ஒரு டாக்டரை அனுப்புவதற்குப் பதிலாக அங்கிருந்த 'கோபால்ற்' இயந்திரத்தை மகரகம வைத்தியசாலைக்கு மாற்றிவிட்டார்கள்.

எமது பிரதேசத்தில் உள்ள பல அரசினர் வைத்தியசாலைகட்கு புண்ணுக்கு மருந்து கட்டச் செல்பவர்கள் அயல் வீடுகளுக்கு பழைய பருத்தி வேட்டித் துண்டுகள் கேட்டுத் திரிவதும் சகஜம் இவை பத்திரிகைச் செய்திகளாகவும் வந்தவை. ஆனால் தென்னிலங்கையில் அப்படியான பண்டேஜ் துணித் தட்டுப்பாடு இருந்ததாக எந்தக்காலத்தும் செய்தி வரவில்லை.

இந்த மாற்றான் தாய் மனப்பான்மைகொள்கை இன்று நேற்றல்ல நீண்ட நெடுங் காலமாக நிலவுகின்றது. இப்படி அவர் கூறினார்.

## குட்டை வெளிப்படுத்திய மோட்டார் சைக்கிள்!

யாழ்ப்பாணம், ஜன, 11

திடீர் என்று மோட்டார் சைக்கிள் வாங்கியது குட்டை வெளிப்படுத்தியது.

வவுனியாக் கச்சேரியில் சில மாதங்களுக்கு முன்னர் 15,000 ரூபா பெறுமதியான முத்திரைகள் களவு போயின.

இது சம்பந்தமாகப் வவுனியா பொலீஸார் விசாரணை நடத்தினர். ஈரப்பெரியகுளத்தைச் சேர்ந்த [illegible] நபரை பொலீஸார் கைது செய்த துடன், ஒரு பகுதி முத்திரைகளையும் கைப்பற்றினர்.

முத்திரைகளை விற்று வாங்கப்பட்ட மோட்டார் சைக்கிளையும் பொலீஸார் கைப்பற்றினர்.

திடீரென்று இந்த நபர் மோட்டார்சைக்கிளை வாங்கியது அயலவர்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியது.

அதைத்தொடர்ந்து கிடைத்த தகவலை வைத்து பொலீஸார் சந்தேகநபரைக் கைது செய்தனர்.

## திரும்பி வருமாறு அழைப்பு

யாழ்ப்பாணம் ஜன, 11

''தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு சுதுமலை மக்கள் விடுக்கும் பணிவான அறிவிப்பு'' என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

சுதுமலை வாழ் மக்கள் என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ள இந்தத் துண்டுப் பிரசுரத்தில,

''23 - 12 - 1985 சிறிலங்கா இராணுவத்துடன் நீங்கள் நடத்திய மோதலைக் கண்டு உங்கள் வீரத்தைப் பாராட்டுகிறோம். ஆனால் 30 – 12 – 1985இல் எங்கள் ஊரில் உள்ள முகாம்களை மூடிவிட்டு வேறு இடங்களில் முகாம் அமைத்துக் கொண்டீர்கள்.

''தயவு செய்து உங்கள் முடிவை மாற்றி மீண்டும் சுதுமலை வந்து உங்கள் முகாம்களை அமையுங்கள்'' என்று கோரப்பட்டிருக்கிறது.

கூறினார்.

பண்ணாகம் மாதர் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் சட்டத்தரணி திரு. பொ. சிவபாலன் தலைமையில் இந்த விழா நடைபெற்றது.

சுகாதார பரிசோதகர் திரு. யோன் உட்படபலர் இவ்விழாவில் உரை நிகழ்த்தினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

வீரம் என்பது எழுந்து நின்று பேசுவது மட்டும் அல்ல; அமைதியாக உட்கார்ந்து அறிந்து கொள்வதும் வீரம் தான்.

-- கார்ல் ஹெர்மான் வொன்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805, 22078
11-01 86 த. பெ. 23

## விமானத்தில் உணவுவகை அனுப்பத் தயக்கம் ஏன்?

இரண்டு மூன்று நாட்கள் பெய்த மழை லட்சக்கணக்கான மக்களை குறுகிய காலத்திற்குள் அகதிகளாக்கி விட்டது. மாரி காலம் என்றால் மழை வரும். மழை வந்தால் வெள்ளம் பெருகும். வெள்ளம் பெருகினால் மக்கள் அகதிகளாவர். இலங்கையில் வெள்ளப் பெருக்கும் அகதிகள் நிவாரணப் பணியும் அனேகமாக வருடாந்தச் சம்பவங்கள், செயற்பாடுகள்.

ஒன்பது வருடங்களாக, ஒரேயடியாக ஆட்சிக் கதிரைக்கு சூடேற்றிக்கொண்டிருக்கும் யு. என். பி. அரசாங்கம் வெள்ளத் தடுப்பு நடவடிக்கை ஏதாவது எடுத்ததா? அடிக்கடி, அதுவும் வெள்ளம் வந்த இரண்டொரு கிழமைகளில் சீனாவின் உதவியுடன் வெள்ளத் தடுப்பு என்று பத்திரிகைகளில் செய்தி அடிப்பதோடு அரசு நின்று விடுகிறது. வடக்கு, கிழக்கைப் பற்றித்தான் அதற்கு அக்கறை இல்லை என்று விட்டு விடலாம். ஏனைய மாகாணங்களிலாவது வெள்ளத் தடுப்புக் குறித்து ஆக்கபூர்வமாக எதுவும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்த வாரத்து வெள்ளத்தால் கிழக்கு மாகாணத்தில் எமது இரத்தத்தின் இரத்தங்கள் சுமார் ஒன்றரை லட்சம் பேர், வீடுகளை விட்டுவெளியேறி அகதிகளாகியுள்ளனர். மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மக்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தமிழர்கள் அகதிகளாவது இப்போது மிகச் சர்வ சாதாரணம். அரசாங்கம் சிலரைச் சம்பளத்துக்கு வைத்து அந்தக் ''கைங்கரியத்தை''ச் செய்து வருகிறது. ஆனால் இப்போது இயற்கை அன்னையின் சீற்றத்தால் கிழக்குத் தமிழ், முஸ்லிம் மக்கள் அகதிகளாக மாறியிருக்கின்றனர்.

இவர்களில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த அகதிகள் நிலை பயங்கரமானது; பரிதாபகரமானது. அரசாங்கக் களஞ்சியங்களில் உணவுப் பொருள்கள் அறவே இல்லை. அதனால் அகதிகளுக்கு உண்டி கொடுத்து உயிர் காக்க முடியாத நிலை நிவாரணப்பணி அதிகாரிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது.

எந்த நெருக்கடியான காலத்திலும் மூன்று மாதத்துக்குத் தேவையான உணவுப் பொருள்களைக் கையிருப்பில் வைத்திருப்பது வழமையான அரச நடைமுறை. மட்டக்களப்பு மட்டும் அதற்கு விதிவிலக்கானது ஏன்? அதுவும் மாரி காலத்தில் இந்த நிலை உருவாக இடம் தந்தது ஏன்? அங்கு 1978 இல் வீசிய சூறாவளி நடத்திய அனர்த்தங்களை அரசு இவ்வளவு விரைவில் மறந்து விட்டதா?

தகுந்த காரணம் கருதியே அரச பண்டசாலைகள் வெறிச்சோட விடப்பட்டன என்று அரசாங்கமும் அதிகாரிகளும் கூறலாம். அதனை ஏற்றுக் கொள்வதாக இருந்தாலுங்கூட, ஆபத்தான நேரத்தில் ஏதோ ஒரு வகையில் உணவுத் தேவை பூர்த்தி செய்யப்பட்டாக வேண்டும்.

வெளி மாவட்டங்களிலிருந்து உணவுப் பொருள்களை தரை மார்க்கமாகத் தருவிப்பதற்கு எந்தவித வாய்ப்பும் இல்லை. அதற்காக தனியார் துறையிலிருந்து உணவுப் பொருள்களை வாங்கி அகதிகளுக்கு நிவாரணமாக வழங்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறதாம்.

தனியார் சொற்ப கையிருப்பையே வைத்திருப்பார்கள். அவர்களிடமே அரசாங்கம் வாங்கி விநியோகித்தால் நிச்சயம் வெளிச் சந்தையில் பொருள்களின் விலை உயரும். இது மேலும் நிலைமையை மோசமாக்குவது ஆகும்.

அகதிகளுக்குத் தேவையான உணவுப் பொருள்களை அரசாங்கம் விமான மூலம் கொண்டு வர முடியாதா? இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்படும் தென்னிலங்கை மக்களுக்கு ஹெலிகொப்டர்களில் உணவுப் பொருள்கள் வழங்கப்படுவது இல்லையா?

அதேபோல மட்டக்களப்புக்கும் உணவுப் பொருள்களை முதல் இரண்டொரு நாட்களுக்காவது விமானத்தில் அனுப்பலாமே! அது பெரும் செலவு என அரசு நினைக்கிறதோ?

வடக்கு, கிழக்கு மாகாணங்களில், ரோந்து என்றும் தேடுதல் என்றும் தரைத் தாக்குதலுக்குக் காவல் என்றும் ஹெலிக்கொப்டர்கள் நாளாந்தம் எத்தனை மைல்களைச் சுற்றி வட்டமிட்டுத் திரிகின்றன? அதிகாரிகளை அங்கும் இங்கும் ஏற்றி இறக்குவதற்காக எத்தனை லீட்டர் எரிபொருளை புகையாக்குகின்றன?

அந்தச் செலவில் பத்தில் ஒரு பங்கைச் செலவிட்டு, குளிரிலும் கூதலிலும் உணவின்றி வாடும் அகதிகளுக்கு உணவுப் பொருள்களை விமானத்தில் தருவித்து ஓரிரு நாட்களுக்காவது கொடுக்க முடியாதா? வேண்டுமாயின் அதன் பின்னர் கடல் மார்க்கமாக உணவுப் பொருள்களைத் தருவிக்கலாம்.

கிழக்கு மாகாண மக்கள் அரசியலில் தமது பக்கம் எனச் சொல்லிப் புளுகிக் கொள்ளும் அரசு, அவர்களுக்கு ஆபத்துக்கு உதவப் பின்னிற்பதேன்? அவர்களும் இப்போது வடக்கு, கிழக்கு இணைப்புக்கு இணங்கி விட்டார்கள் என்பதை அறிந்து விட்டதோ?

# தமிழர் தாயக ஒன்றிணைப்புக்கு கிழக்கு முஸ்லிம்கள் ஆதரவு

தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்துள்ள மாற்று யோசனைகள் அடங்கிய திட்டத்தின் நான்காவது பகுதி இன்று பிரசுரமாகிறது.

இணைப்பு 1 - தொடர்

## மாற்று யோசனையில் கூட்டணி தகவல்

வரலாற்று ரீதியாக, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர்களே பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்றனர்.

1921 இல் அரசாங்கம் எடுத்த புள்ளிவிவரப்படி, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழரே பூரண பெரும்பான்மையாக இருந்தனர்.

அந்த மாவட்டங்கள் வருமாறு:

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா திருகோணமலை, மட்டக்களப்பு. (1960 ஆம் ஆண்டு வரை, தற்போதைய அம்பாறை மாவட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒருபகுதியாக இருந்தது.)

கிழக்கு மாகாணம் முழுவதிலுமே சிங்களவர் சனத்தொகை 5 சத வீதத்துக்குக் குறைவானதாகவே இருந்தது.

அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களினால் தான் தமிழரின் பாரம்பரிய பிரதேசம் பறிபோனது. (காணி சம்பந்தமாக கொள்கை விளக்கத்தில் இது பூரணமாக விவரிக்கப்பட்டுள்ளது)

எப்படி இருப்பினும், தமிழர், வடக்கு மாகாணத்தில் 92.5 சத வீதமாகவும்,

கிழக்கு மாகாணத்தில் 42.1 சத வீதமாகவும்,

வடக்கு- கிழக்கு மாகாணங்களை இணைத்துப் பார்க்கும் போது 68 70 சத வீதமாகவும் இருக்கின்றனர்.

86 சத வீதத்தில் மிஞ்சிய 18 சத வீதமும் தமிழ் பேசும் முஸ்லிம்களே.

சந்தர்ப்பம் கிடைப்பின் முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் தமிழரின் நிலைக்கு ஆதரவு அளிப்பர்.

கிழக்கு மாகாணத்தையும் சேர்த்து முஸ்லிம்களின் ஆதரவுடன் தமிழ் மொழி மாநிலம் ஒன்றை அமைப்பது பொருத்தமானதாக இருக்கும்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம்களின் தலைவர்களும் இதை உறுதிப்படுத்தி உள்ளனர்.

முஸ்லிம்களில் 3இல் 2பங்கினர் ஏனைய ஏழு மாகாணங்களில் வாழ்கின்றனர்.

இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் தமிழருடன் இணைந்து செயல்பட்டால் வெளிமாகாணங்களில் உள்ள முஸ்லிம்கள் மீது பழிவாங்கல் இடம் பெறலாம் என்ற பயம் கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு உள்ளது.

அதன் காரணமாக தமிழருடன் இணைந்து செயல்பட அவர்கள் அஞ்சுகின்றனர்.

### மாவட்ட சபைகள்

1981இல இடம்பெற்ற மாவட்டசபைத் தேர்தல்களிலும் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தமிழரின் தாயகம் என்பது பெரும்பான்மை மக்களால் நிரூபிக்கப்பட்டு விட்டது.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்றது.

சிங்களக் குடியேற்றத் திட்டத்தினால் அம்பாறை மாவட்டத்தில் பெரும்பான்மை பெற முடியவில்லை.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி பெரும்பான்மை வாக்குகள் பெற்றதுக்குக் காரணம் முஸ்லிம் மக்களின் ஒத்துழைப்பே.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு 3 இல் 2 பங்கு வாக்குகள் கிடைத்தன.

1947இல் இருந்து திருகோணமலை மாவட்டத்தில் தேர்தல்கள் நடைபெற்று வந்துள்ளன. அத்தேர்தல்களில் 23 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்கள் 14 உறுப்பினர்கள் தமிழ் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள். மூன்று யு.என்.பி உறுப்பினர்கள் மூன்று சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள். தமிழர் ஆதரவுடன் மூன்று சுயேச்சை உறுப்பினர்கள்.

1977 தேர்தலில்தான் முதல் தடவையாக திருகோணமலை மாவட்டத்தில் இருந்து சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டார்.

இக் காரணங்களுக்காக தமிழ் மொழி மாநில அமைப்புக்குள் திருகோணமலை வரவேண்டும்.

வடக்கு, கிழக்குடன் கொண்டுள்ள பூகோள ரீதியான தொடர்பும் திருகோணமலை, அந்த மொழிவாரி அமைப்புக்குள் இடம்பெறவேண்டும் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

12-8-1985 இல் நடந்த திம்பு மாநாட்டின் இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் கலந்து கொண்ட இலங்கை அரசுக் குழுத் தலைவர் டாக்டர் எச். டபிள்யு. ஜெயவர்த்தன சொன்னதாவது;

''நாட்டின் 30 சதவீத நிலப்பகுதி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளது நாட்டின் கரையோரப் பகுதியில் 60சத வீதமும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தான் உள்ளன.''

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள நிலம், வரண்டது, அபிவிருத்தி செய்யப்படாதது.

அதிலும் அபிவிருத்தி அடைந்த, நீர்ப்பாசன வசதி பெற்ற காணிகளில் சிங்களவர்களே குடியமர்த்தப்பட்டுள்ளனர். அவையாவன: பதவியா, அல்லை, கந்தளாய், பாவற்குளம், மகாவிளாங்குளம், கல்ஓயாத் திட்டங்கள்.

வடக்கு, கிழக்குக்கு வெளியே எந்த நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழும் தமிழர் எவரும் குடியமர்த்தப்படவில்லை,

அம்பாறை மாவட்டத்தில் நீர்ப்பாசன வசதி பெற்ற பெரும்பாலான காணிகளில் சிங்களவர் தான் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்குக்கு வெளியே தமிழர் காணி வாங்குவதோ, வாழ்வதோ முடியாத காரியமாகி விட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பொருளாதாரரீதியில் பின் தள்ளப்பட்டுள்ளன.

நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு உள்ள வளங்கள், அபிவிருத்தி செய்யும் வாய்ப்புக்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு இல்லை.

ஆகவே வடக்கு. கிழக்கு மாகாணங்களை இணைத்து ஓர் அமைப்பாக உருவாக்குவது சிங்களவருக்கு தீமையை ஏற்படுத்தாது.



**பொய்யாமொழி**

குறள்:
அறத்தாற்றின் இல்வாழ்க்கை
யாற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவது எவன்.

பொருள்:
ஒருவன் அறநெறியில் இல்வாழ்க்கையைச் செலுத்தி வாழ்வானானால், அத்தகையவன் வேறு நெறியில் சென்று பெறத்தக்கது என்ன?

## வெள்ளத்தில் தப்பிய நெற் செய்கையை காப்பது அவசியம்

### உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜன. 11

அண்மையில் பெய்த பெருமழை காரணமாக வெள்ளத்தில் அழியாது, தப்பியுள்ள நெற் செய்கையை காப்பாற்றுவதற்குரிய நடவடிக்கைகளை யாழ்ப்பாண விவசாயிகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை இந்த அவசர வேண்டுகோளை உதயன் மூலம் விடுத்து உள்ளார்.

அவ்வேண்டுகோளில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

அண்மையில் பெய்த பெருமழை காரணமாக 3500 ஹெக்டர் நெற்செய்கை நாசமாகி உள்ளது.

எஞ்சியுள்ள நெற்செய்கை எப்படியும் காப்பாற்றப்படுவது அவசியம்.

விவசாயிகள் இந்த நெற்செய்கைக்கு [illegible] பசளை இடுவது முக்கியம்.

தற்போது நிலவும் ஈரலிப்பு இந்தச் செயற்பாட்டுக்கு மிகவும் உகந்தது ஆகும்.

இந்த ஈரலிப்பு நிலை தொடர்ந்து நிலவுமானால் மேற்கட்டுப் பசளையும் இடப்படும்போது இந்த எஞ்சிய நெற் செய்கை நல்ல விளைச்சலைத் தரும்- இவ்வாறு அவர் வலியுறுத்தி உள்ளார்.

### பல்கலைக்கழக மாணவர் குழு நாடு திரும்பியது

யாழ்ப்பாணம், ஜன 11

ஜப்பானிய சர்வதேச மாணவர் மன்றத்தின் அழைப்பின் பேரில் ஜப்பான் நாட்டுக்கு விஜயம் செய்த இலங்கைப் பல்கலைக்கழகக் குழு நாடு திரும்பி உள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவத்துறை மாணவன் திரு. கே. இராஜகாந்தன், பேராதனை பல்கலைக்கழக மருத்துவத்துறை மாணவன் திரு. கே. சிவகுமார் ஆகியோரும் ஏழு பேரைக் கொண்ட இக் குழுவில் இடம் பெற்றனர்.

### இறந்தவருக்கு பதவி உயர்வு

யாழ்ப்பாணம், ஜன 11

ஓமந்தைக்கு அருகில் இடம்பெற்ற சிலிண்டர் கண்ணிவெடி விபத்தில் மரணமான லெப்டினன்ட் பேர்னண்டோ, கப்டனாக பதவி உயர்த்தப்பட்டார்.

வெள்ளவத்தையைச் சேர்ந்தவர் இவர். இவரின் மரணத்தைத் தொடர்ந்து, வெள்ளவத்தைப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

### ஆசிரியர்களைக் கௌரவிப்பது ஆரோக்கியமான மரபு

யாழ்ப்பாணம், ஜன 11

''நீண்ட காலம் நேர்மையாகக் கடமை ஆற்றி ஓய்வு பெறும் ஆசிரியர்களைக் கௌரவிப்பது ஆரோக்கியம் வாய்ந்த மரபாகும்''.

உடுப்பிட்டி கல்வி வட்டாரத்தில் சென்றாண்டு இளைப்பாறிய அதிபர்கள் ஆசிரியர்களின் சேவை நலம் பாராட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அப்போது சிறப்புரை ஆற்றிய பிரதம கல்வி அதிகாரி திரு. எஸ். சுந்தரலிங்கம் இவ்வாறு குறிப்பிட்டார். உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வி. கே. ஈசுரபாதம் தலைமை வகித்தார்.

பிரதம கல்வி அதிகாரி திரு. வி.தங்கராசா, வட்டாரக் கல்வி அதிகாரி திரு பொன். கணேசன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

உடுப்பிட்டி கல்வி வட்டாரத்தில் சென்றாண்டு ஓய்வுபெற்ற இருபத்தி மூன்று அதிபர் ஆசிரியர்களும் மேடையில் அமர்ந்திருந்தனர்.

''உடுப்பிட்டி கல்வி வட்டாரத்தில் ஆசிரியர் பற்றுக்குறை நிலவிய போதிலும் ஓய்வுபெறும் இந்த 23 ஆசிரியர்கள் கடமை உணர்வுடன் சேவை ஆற்றினார்கள்.

இப்பகுதி மாணவர்களின் கல்வித் தரம் உயர்வதற்கு அயராது பணி புரிந்தவர்கள் இவர்கள்''.

இவ்வாறு தலைமையுரையில் உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஈசுரபாதம் குறிப்பிட்டார்.

### திருகோணமலை ஆஸ்பத்திரியில் 4 டாக்டர்கள் மட்டுமே!

திருகோணமலை, ஜன.11

திருகோணமலை அரசாங்க ஆஸ்பத்திரியில் நான்கு வைத்திய அதிகாரிகள்தான் தற்சமயம் கடமை புரிகின்றனர்.

குறிப்பிட்ட தொகை வைத்திய நிபுணர்கள் பணியாற்றாத காரணத்தினால், பயிற்சிக்கு அனுப்பப்பட்ட 8 டாக்டர்களையும் சுகாதார அமைச்சு திருப்பி எடுத்து வேறு ஆஸ்பத்திரிக்கு அனுப்பியுள்ளது.

பொது வைத்திய நிபுணர், மகப்பேற்று நிபுணர் ஆகியோர் தற்காலிக இடமாற்றம் பெற்று கொழும்பு சென்றுள்ளனர்.

சத்திரசிகிச்சை நிபுணர் நிரந்தரமாகவே இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டார். பதிலுக்கு ஒருவர் நியமிக்கப்படவில்லை.

கண் சிகிச்சை நிபுணரும் இடமாற்றம் கோரி விடுமுறையில் இருக்கிறார்.

இப்பொழுது 2 பெண் வைத்திய அதிகாரிகள், ஒரு ஆண் டாக்டர் ஆகியவர்களை வைத்துக் கொண்டே மாவட்ட வைத்திய அதிகாரி சமாளித்து வருகின்றார்.

அவசர சத்திர சிகிச்சைகளுக்கான நோயாளர்கள் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர்.

### அகதிகளுக்கு அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜன.11

நவாலி அகதி முகாமில் தஞ்சம் புகுந்துள்ள வெளி மாவட்டத்தினருக்கு தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனம் பெறுமதி உள்ள அன்பளிப்புகளை வழங்கி உள்ளது.

## அச்சுவேலியில் நவீன சந்தை பத்து லட்சம் ரூபா செலவில்

### யாழ். மாவட்டத்தில் கூடிய நிதி ஒதுக்கீடு இதற்குத்தான்

பலாலி, ஜன. 11

பத்து இலட்சம் ரூபா செலவில் இவ்வருடம் அச்சுவேலியில் நவீன சந்தை அமைக்கப்படவுள்ளது.

பழைய கட்டடங்களுடன் ஒழுங்கற்ற முறையில் அமைந்துள்ள சந்தையின் அமைப்பினை முற்றாக மாற்றி புதிய சந்தை ஒன்றை அமைப்பதற்கு இவ்வருடம் மாவட்ட அபிவிருத்தி நிதியில் இருந்து பத்து இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மாவட்ட சபையில் முன்னர் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமையவும் -

அச்சுவேலி பிரஜைகள் குழு, விழிப்புக் குழுக்கள் ஆகியவை அரசாங்க அதிபரை நேரில் சந்தித்து விடுத்த வேண்டுகோளின் விளைவாகவும் இந்த நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இவ் வருடம் யாழ். மாவட்டத்துக்குள் ஒதுக்கப்பட்ட நிதியில் இதுவே ஆகக்கூடிய தொகை என்றும்-

கட்டாயமான ஒரு தேவைக்கு இம்முறை இப்பணம் ஒதுக்கப்படுகின்றது எனவும் மாவட்ட அபிவிருத்திச் சபையின் உதவிச் செயலாளர் திரு. பரமநாதன் தெரிவித்தார்.

### இலங்கை விஜயம்

கொழும்பு, ஜன 11

சீனத் தலைவர் திரு. டெங்ஷியா ஓபொங் உத்தியோகபூர்வவிஜயம் ஒன்றை மேற்கொண்டு இங்கு வருகின்றார்,

மார்ச் 13 ஆம் திகதி வரும் சீனத் தலைவர் மூன்று தினங்கள் இலங்கையில் தங்குவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Dilka Watch Works**
எமது தன்னிகரில்லா சேவையே
உங்கள் கடிகாரத்தினை நெறிப்படுத்தும்
கை, மேசை, சுவர் கடிகாரம், எலக்ரோனிக் கடிகாரம்
எதுவானாலும் எம்மால் உங்களுக்கு
உத்தரவாதத்துடன் திருத்திக்கொடுக்கப்படும்
டில்கா வோச் வேக்ஸ்
(பஸ் நிலைய எதிர் மேல்மாடி)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

11-01-1986

வீடியோ ஒளிப்பதிவில்
உங்கள் தேவைகள் எதுவானாலும்
யாழ்நகரில் அதிவிசேட
VIDEO ஒளிப்பதிவிற்கு எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்
உங்கள் விருப்பமே எமது செயல் திறன்
STUDIO DILKAH
(பஸ் நிலைய எதிர் மேல் மாடி)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## வித்தாரம்

தம்பி, முரளியாரே! வாரும், காலங்காத்தாலை மழைக் குளிருக்குள்ளை எங்கே போயிட்டு வாறீர்? இப்ப மார்கழி மாதம் தான். எண்டாலும், மார்கழிக் குளிரை விடக் கூடின குளிரா யெல்லோ இருக்குது. சுவற்றெர் போட்டிருக்கிறுய். அதாலை உனக்குத் தெரியாது.

சூடாய் ஒரு ரம்ளர் தேத்தண்ணி அடிச்சால் நல்ல கணகணப்பாய் இருக்கும். காலையிலை எழும்பின உடனை 'பெட் கொபி' எண்டு வெள்ளைக்காரன் சொல்லுவான். ஆனல் எங்கடை ஆக்கள் 'பெட் ரீ' தான் எடுக்கிறணுங்கள் இல்லையே!

நீர் ஏற்கனவே ஒருரம்ளர் ரீயை உள்ளுக்குத் தள்ளி இருப்பீர். பரவாயில்லை. இது குளிருக்கு ஏத்த சூடு. இந்தாரும் கொஞ்சமாவது குடியும்.

நாங்கள் இஞ்சை மணம் குணமா தேத்தண்ணி குடிக்கிறும். அங்காலை வெளிநாட்டுப் பக்கங்களிலை "சிலோன் ரீ" ருசியான தேயிலை எண்டு வாங்கித் தேத்தண்ணி குடிச்சவை எல்லாம் உதைக் குடிக்க முடியாமல் வாயைப் பொச்சடிக்கிற நிலைமை வந்திட்டுது.

உனக்கு இன்னும் விஷயம் விளங்கயில்லைப் போலை நீ பேந்திப் பேந்தி முழுசிறதைப் பாத்தால் அப்பிடித்தான் கிடக்கு.

இலங்கைத் தேயிலையை அதிகமாக வாங்கி வந்த ஆஸ்திரேலியா, பிரிட்டன், அமெரிக்கா போன்ற பல நாடுகள் இலங்கைத் தேயிலை இறக்குமதியை இடை நிறுத்தி வைச்சிட்டுதுகள் அப்பா!

இலங்கைத் தேயிலையிக்கை நஞ்சு கலந்திருப்பதாக வந்த செய்திகளைத் தொடர்ந்து தான் வெளிநாடுகள் இறக்குமதியை நிறுத்தி இருக்குதுகள்.

நஞ்சு கலந்திருப்பதாகத் தமிழ்ப் பொடியள் தானே சொல்லுறுங்கள் எண்டு நினைச்சு அரசாங்கம் அட்டை பண்ணியிட்டுது. ஆனல் வெளிநாடுகள் அபபடி இருக்கயில்லை.

அதுகின்ரை விளைவு தான் உந்த இறக்குமதி இடை நிறுத்தம் எல்லாம். இப்பதான் அரசாங்கம் ஓடி முழிக்குது

வெளிநாடுகளின்ரை தூதுவர்மாரைக் கூப்பிட்டு மாநாடு. தேயிலையைச் சோதிச்சுப் பாக்கத் தனியான பிரிவு. கொழுந்து பறிக்கையிக்கை காவல். தேயிலைத் தோட்டங்களுக்குப் பாதுகாப்பு.

அப்படி இப்பிடி எண்டு அவசரப்படுகினம்.

தேயிலை தான் இலங்கையின்ரை வருமானத்திலை பெரும்பகுதி. அதுகின்ரை ஏற்றுமதி இறங்கிச்சுதோ, பெரிய பணக் கஷ்டம் வரும்.

தேயிலையிலை நஞ்சு எண்டு சொல்லுறது. வெறும்வெருட்டு எண்டு இலங்கை அரசாங்கம் சொன்னுப்போலை வெளிநாட்டுக்காரன் அதை நம்புவானே.

அவன் முன்னெச்சரிக்கையா இருந்து தங்கடை மக்களைக் காப்பாற்ற வேணும் எண்டல்லோ யோசிப்பான்.

வெளிநாட்டுக்காரர் தேயிலை வாங்கிறதைக் கெஞ்ச நாளைக்கு நிறுத்துகினம், அதுதான் இடை நிறுத்தம், எண்ட செய்தி வந்தண்டே நான் யோசிச்சனுன். அது சரியாய்ப் போச்சு,

இனித் தோட்டங்களிலை வேலை செய்யிற வைக்கும் பெரிய கரைச்சலாய்த்தான் இருக்கும்.

பாதுகாப்பு, பத்தியம் எண்டு தேவையில்லாமல் சுரண்டுவினம். ஆனு யாழ்ப்பாணத்து ஆக்களோடை சுரண்டுமாப் போலை அங்கை மலைநாட்டுத் தமிழரிட்டை மோசமாய்ச்சுரண்டிஞப் பிரச்சினை.

ஏன் சொல்லு பாப்பம்?

அப்பிடிச் சுரண்டினு அது அக்கரையாலும் அக்கறைப்படுகின்ற விஷயமாகி விடுமல்லே?




# தேயிலைக்கு பாதுகாப்பு

## கொழுந்து பறிக்கும் இடத்தில் இருந்து கப்பல் வரைக்கும்

### அமைச்சர் கூட்டிய மாநாட்டில் தகவல்

கொழும்பு, ஜன.11

* தினமும் 40,000 பெட்டித் தேயிலை பரிசோதனை.
* கொழுந்து பறிக்கும் போதும் காவல்.
* தொழிற்சாலைகளிலும் பாதுகாப்பு ஜரூர்.
* தேயிலைத் தோட்டங்களுக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்.

19 நாடுகளைச் சேர்ந்த ராஜதந்திரிகளுக்கும் மேற்கண்ட தகவல்கள் வெளியிடப்பட்டன.

இலங்கைத் தேயிலையை இறக்குமதி செய்யும் நாடுகளின் ராஜதந்திரிகளின் மாநாடு ஒன்று நேற்றுக்காலை கொழும்பில் நடந்தது

அந்த மாநாட்டுக்கு தோட்டத் தொழிற்துறை அமைச்சர் பேஜர் மொன்டேகு ஜயவிக்கிரம தலைமை வகித்தார்.

தேயிலையில் நஞ்சு கலக்கப்படுகின்றது என்ற தமிழ் ஈழ இராணுவத்தின் எச்சரிக்கையைத் தொடர்ந்தே இம் மாநாடு கூட்டப்பட்டது.

அப்பொழுதே அரச தோட்டத் தொழில் கூட்டுத்தாபனத் தலைவர் திரு ரஞ்சன் விஜயரத்ன மேற்கண்ட தகவல்களை வெளியிட்டார்.

திரு. விஜயரத்ன மேலும் சொன்னதாவது:-

தினமும் ஒரு லட்சம் தேயிலைப் பெட்டிகள் பரிசோதனைக்கு வருகின்றன.

ஆனல் 40,000 பெட்டித் தேயிலைதான் பரிசோதனை முடிந்து ஏற்றுமதிக்கு அனுப்பப்படுகின்றன.

தோட்டத்தில் கொழுந்து பறிப்பதில் இருந்து தொழிற்சாலை வரையு —

பின்னர் பெட்டியில் அடைக்கப்படுவதில் இருந்து கப்பலில் ஏற்றப்படும் வரையும்—பாதுகாப்பு தீவிரமாக்கப்பட்டுள்ளது.

இப்படி திரு. விஜயரத்ன சொன்னர்.

## வீடு தீக்கிரை

கிளிநொச்சி ஜன, 11

கிளிநொச்சி திருவையாறு, இரத்தினபுரம் பகுதிக்கு நேற்று முன்தினம் கவசவாகனங்களில் சென்ற ஆயுதப் படையினர் அப்பகுதியில் உள்ள வீடு ஒன்றைச் சோதனையிட்ட பின் தீயிட்டுக் கொளுத்தினர்கள்.

இதே வேளை நேற்று முன்தினம், திருநகர் கிருஷ்ணன் கோவிலடிக்குச் சென்ற ஆயுதப் படையினர் அப்பகுதி வீடுகள் மீது சோதனை நடத்தினர். அப்பகுதிகளில் சட்டவிரோத மின் பாவனையில் ஈடுபட்ட பலரையும் எச்சரித்தனர்.

இதே போன்று அன்று மாலை திருவையாறு சென்று திரும்பிய ஆயுதப்படையினர் பரவிப் பாஞ்சான் பகுதியில் சட்டவிரோத மின் பாவனையில் ஈடுபட்ட பலரை எச்சரித்துச் சென்றனர்.

## விடுதலை; பிறர் தரமாட்டார் நாங்களே பெறவேண்டும்

### அஞ்சலிக் கூட்டத்தில் உரை

நல்லூர், ஜன. 11

எமது இனத்திற்கான விடுதலையை மற்றவர்கள் வெறுமனே தரமாட்டார்கள்.

எமது விடுதலையை நாமே பெற்றுக்கொள்ள வேண்டும்.

பேராசிரியர் திரு. கு. நேசையா இப்படித் தெரிவித்தார்.

நல்லூர் இந்து விடுதியில் நேற்று நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் இறந்தவர்களுக்கான அஞ்சலிக் கூட்டத்தில் தலைமை உரை நிகழ்த்துகையிலேயே அவர் இப்படிச் சொன்னர்.

இந்து கிறீஸ்தவ முஸ்லிம் மத குருமார்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

1974-ஆம் ஆண்டு ஜனவரி 10-ஆம் திகதி தமிழராய்ச்சி மாநாட்டின் போது இறந்த ஒன்பது பேருக்கும எம்மைவிட்டு அகன்ற மற்றைய ஆத்மாக்களுக்கும் ஒரு நிமிட அஞ்சலி செலுத்தப்பட்டது.

கு. நேசையா அங்கு தொடர்ந்தும் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:-

அன்று நடந்த இந்தப் படுகொலைகள் திட்டமிடப்பட்ட செயல்களே.

இதேபோல் இப்பொழுதும் பல திட்டமிட்ட செயல்கள் தமிழ் மக்களிடையே நடத்தப்படுகின்றன.

எமது இனம் ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும்

எங்கள் தேசத்தை விட்டு இளைஞர்கள் ஓடிவிடக்கூடாது. எம் இனத்தை — எமது விடுதலையை — பொறுக்கவரையில் அது ஒரு இழிவான செயல்.

இப்படி அவர் கூறினர். யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் அங்கு உரை நிகழ்த்துகையில் மாநாட்டில் இறந்தவர்களுக்கு அஞ்சலிக் கூட்டம் நடத்துவது மாநகராட்சி மன்றத்தின் கடமையாகும் என்றூர்.

முன்னுள் மாவட்ட சபைத் தலைவர் திரு. என் இராசேந்திரன் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:-

1974-ஆம் ஆண்டு தமிழர்களுக்கு ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

இந்தச் செயலின் காரணமாகவே தமிழர்களின் உரிமைகளை வன்முறைகள் மூலம்தான் பெறப்படலாம் என்றநம்பிக்கை இளைஞர்மதியில் உக்கிரமடைந்தது.

இன்று அந்த ஒன்பது பேரைவிட பல மடங்கு தமிழ் மக்கள் கொல்லப்பட்டு வருகின்றனர்.

அவர்கள் எல்லோருக்கும் ஒன்று சேர்த்துத் தான் இன்றைய பிரார்த்தனைக் கூட்டத்தை நடத்துகிறேம் —இப்படி அவர் தெரிவித்தார்.

ஜனுப் இமாம், திரு. எஸ். சிவமகாராசா, திரு. பொன் மதிமுகராசா, திரு. கனகசபாபதி ஆகியோரும் அங்கு உரையாற்றினர்.

## கிளிநொச்சியில் யுத்த நிறுத்த மீறல்

### பிரஜைகள் குழு முறையீடு

கிளிநொச்சி, ஜன. 11

கிளிநொச்சியில் கடந்த டிசம்பர்மாதம் ஆயுதப் படையினர் நடத்திய ஆறு அத்துமீறல் சம்பவங்களில் 7 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். மூன்று பேர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு இலக்கானர்கள். பல வீடுகள் தீக்கிரையாகின.

கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கு செய்துள்ள முறைபபாட்டில் இவ் விவரங்கள் தெரிவிக்கப் பட்டிருக்கின்றன.

கிளிநொச்சியில் நடைபெறும் போர் நிறுத்த மீறல் சம்பவங்கள் குறித்து மாதந்தோறும் கண்காணிப்புக் குழுவுக்கு முறையீடு செய்வது என கிளிநொச்சி பிரஜைகள் குழு தீர்மானித்திருப்பதாகவும் அதன் செயலாளர் சட்டத்தரணி திரு. எஸ். ஸ்ரீஸ்கந்த ராஜா தெரிவித்தார்.

திருகோணமலை, வவுனியா பகுதியிலிருந்து அகதிகளாக வந்திருக்கும் தமிழ் மக்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் பற்றி பிரஜைகள் குழு கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் திரு எஸ். அமிர்தலிங்கத்தைச் சந்தித்துக் கூறியது.

## ரூபவாஹினி

11-1-1986

மாலை

| | | |
|---|---|---|
| 5 00 | – | செய்திகள் |
| 5 05 | – | டொல்பின் டே (குழந்தைகள் நிகழ்ச்சி) |
| 5.30 | – | உலக விளையாட்டு ஸ்பெஷல் |
| 6.30 | – | செய்திகள் (தமிழ்) |
| 7.00 | – | குரங்குகளி உலகம் |
| 8.00 | – | செய்திகள் (சிங்களம்) |
| 8.25 | – | 'யசோவரய' டெலி நாடகம் |
| 9.00 | – | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9.25 | – | இஸ்லாமிய சங்கீதம் பேட்டி இசையரசு நாகூர் இ.எம். ஹனிபா |
| 9.50 | – | மக்கிளெய்ன்ஸ் லோ–துப்பறியும் தொடர் |

## ராஜினமா......

(1ம் பக்க தொடர்ச்சி)

கொலைசெய்வது, அவர்களைக் கைதுசெய்வது, அவர்களது சொந்த இடங்களிலிருந்து அவர்களைவிரட்டுவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் பாதுகாப்புப்படையினரைக் கண்காணிப்புக்குழுவினுல் தடுக்க முடியவில்லை. இப்படித் தமது ராஜினமாக் கடிதத்தில் அவர்கள் தெரிவித்திருப்பதாயும் அறிய வருகிறது.

கண்காணிப்புக் குழு சுயேச்சையாகச் செயல்படவும் யுத்த நிறுத்த மீறல்களைத் தடுக்கவும் தவறிவிட்டது என இருவரும் தமது கடிதத்தில் வருத்தம் தெரிவித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

## இராமேஸ்வரம். . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் 84,000 மலையகத் தமிழர்களும் தாங்களாகவே இந்தியா திரும்பி விடுவர் என்று இலங்கை அரசு நம்புகின்றதாம்.

அது மட்டும் அல்ல, இலங்கைத் தமிழ் அகதிகள் பத்திரமாகவும் கண்ணியமாகவும் தாயகம் திரும்பும் நிலைமை வரும் வரை, குடியுரிமை பெற்ற இந்தியர்களைத் திருப்பி எடுக்கமாட்டோம் என்று கூறி இலங்கை அரசு மீது நிர்ப்பந்தம் கொடுக்கும் இந்திய நோக்கத்தை இது முறியடித்ததாக இருக்கும் என்றும் இலங்கை அரசு வட்டாரங்கள் கருதுகின்றன.

அதே வேளை இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கிலேயே பிரதமர் ராஜீவ் எடுத்த முடிவு அமைந்தது.

இனப்பிரச்சினை வேறு; இந்தியத் தமிழர் விஷயம் வேறு என்ற... ...தாகப் போன்று இலங்கை, கப்பல், ரயில் சேவைகளை ஆரம்பிக்கிறது.

இந்திய ராஜதந்திரத்துக்கு விடப்பட்ட சவாலாக கப்பல் - ரயில் சேவை ஆரம்பமாகப் போகின்றது. இவ்வாறு அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

## ஆலயம்...

(1ம் பக்க தொடர்ச்சி)

ணுவ முகாமில் இருந்த ஆயுதப் படையினரும் சுடத்தொடங்கினர்.

ஒன்றரை மணித்தியாலங்களாகத் துப்பாக்கிச் சூட்டுச்சத்தங்கள் கேட்டன. இச்சம்பவத்தைத் தொடர்ந்து கோவிலுக்கு வந்த பக்தர்கள் பலர் அங்கும் இங்கும் சிதறி ஓடினர். அப்பகுதியில் சிலமணிநேரம் பதற்றம் நிலவியது.

ஹெலிக்கொப்டர் ஒன்றும் அப்பகுதியில் தாழப் பறந்துசென்றது.

ஆலயத்தின் சுவர்களையும் குண்டுகள் தாக்கினவாம்.

இதனல் ... துறை-யாழ்ப்பாணம் ... சேவைகள் ஒருமணி நேரம் ஸ்தம்பித்தன.

## விளையாட்டரங்கு

## உதைபந்தாட்ட லீக்கின் 'நொக்கவுட்' போட்டி இன்று

### 9 வீரர் கொண்ட அணிகள் மோதும்

— விளையாட்டுச் செய்தியாளர்:- சண். ஜோண்சன் —

யாழ்ப்பாணம், ஜன.11

யாழ் உதை பந்தாட்ட லீக் தலைவர் சுற்றுக் கிண்ணத்திற்காக லீக் நடத்தும் '9 பேர், கொண்ட 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டி இன்று ஆரம்பமாகிறது.

இந்த நொக்கவுட் போட்டிகளை சென் பற்றிக்ஸ் கல்லூரி புதிய விளையாட்டரங்கில் நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இறுதி நேர ஒழுங்கின்படி இப் போட்டிகள் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறுமென 'லீக்'கின் செயலர் திரு. ஏ. தேவராஜா தெரிவித்தார்.

இன்று ஆரம்பமாகும் இப்போட்டியில் வடமாகாணத்தில் முன்னனி வகிக்கும் பத்து விளையாட்டுக் கழகங்களின் அணிகள் பங்குபற்றுகின்றன.

யாழ்ப்பாணம் கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகம், பாஷையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம், குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகம், கொக்குவில் பொற்பதி ஐக்கிய விளையாட்டுக் கழகம், நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழகம் நாவாந்துறை சென் நிக்கலஸ் விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாணம் முஸ்லிம் விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாணம் வைக்கிங்ஸ் விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாணம் புனித வளன் விளையாட்டுக் கழகம், அல்லைப்பிட்டி சென் பிலிப்ஸ் விளையாட்டுக் கழகம் ஆகிய பத்துக் கழகங்களின் அணிகள் இந்தப் போட்டியில் மோதுகின்றன.

யாழ்நகரில் முதன்முதலாக நடைபெறும் இப் போட்டிக்கான விதிகள் யாவும் 11 பேர் கொண்ட போட்டியைப் போலவே அமையும்.

பிற்பகல் 3-30 மணிக்கு ஆரம்பமாகும் இன்றைய போட்டியில் அல்லைப்பிட்டி சென் பிலிப்ஸ் அணியும் நாவாந்துறை சென் நிக்கலஸ் அணியும் மோதுகின்றன.

இந்த உதைபந்தாட்டப் போட்டியை தொடர்ந்து ஒரு கண்காட்சி உதைபந்தாட்டம் நடத்த தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

யாழ் உதைபந்தாட்ட லீக் நடத்திய 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் 'ஏ' பிரிவின் சாம்பியனுன கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து 'பி' பிரிவு சாம்பியனுன நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழகம் இந்தக் கண்காட்சி ஆட்டத்தில் விளையாடும்.

இப்போட்டிகளின் முடிவில் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியி ஏ, பிரிவிலும் பி. பிரிவிலும் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற அணிகளுக்கான பரிசில்கள் வழங்கப்படும்.

இப்போட்டிகளுக்கு யாழ் உதை பந்தாட்ட லீக்கின் தலைவர் டாக்டர் ஜே. பி. சி பிலிப் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

## புன்னலைக் கட்டுவனில் கரபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜன.11

புன்னலைக் கட்டுவனில் கரபந்தாட்ட சுற்றுப் போட்டி ஒன்று நடைபெறவுள்ளது.

மின்னெளியில் நடைபெறவிருக்கும் இந்த கரபந்தாட்ட சுற்றுப்போட்டிக்கான ஒழுங்குகளை புன்னலைக்கட்டுவன் பறக்கும் கழுகுகள் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்து வருகின்றது.

இச் சுற்றுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்களை தைப்பொங்கல் தினத்திற்கு முன்னதாகக் கிடைக்கும்படி அனுப்பி வைக்க வேண்டுமென விளையாட்டுக்கழக அணிகள் கேட்கப் படுகின்றன.

விண்ணப்பங்களை 'செயலாளர்' பறக்கும் கழுகுகள் விளையாட்டுக் கழகம் புன்னலைக்கட்டுவன் தெற்கு, சுன்னுகம் என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

## சாமி கும்...

(1ம் பக்க தொடர்ச்சி)

மேலும் கூறியதாவது!

நேற்று வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் சைக்கிளில் சந்நிதி கோவிலுக்குப் போனேன்.

சுவாமியைக் கும்பிட்டு, பூசை முடிந்து வீட்டுக்கு புறப்பட்டேன், அப்போது பெரிய குண்டு ஒன்று வெடித்தது.

அதன் பின்னர் துவக்குகளால் சுடும் சத்தமும் எனக்குக் கேட்டது.

அங்கு நின்ற மற்றையவர்கள் பயத்தினுல் ஓடினுர்கள்.

அங்கு நின்ற வான், கார்கள் எல்லாம் நிமிடத்தினுள் ஓடி மறைந்து விட்டன. நானும் எனது சைக்கிளை எடுப்பதற்காக ஓடினேன்.

சந்நிதியான் தேர்முட்டிக்கு அருகே ஓடிய போது எனது காலை ஏதோ துளைத்தது.

கால் எரிந்தது குனிந்து பார்த்த பொழுது இரத்தம் ஓடிக் கொண்டிருந்தது.

அப்படியே விழுந்து விட்டேன்.

எனக்குப் பக்கத்தில் நின்ற சிலருக்கும் காயம் ஏற்பட்டிருக்கலாம்.

பின்னர் அங்கு வந்த பொதுமக்கள் ஒருவானில் என்னைத் தூக்கிப் போட்டு மந்திகை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனுர்கள்.

அங்கிருந்து அம்புலன்ஸ் மூலம் என்னை யாழ்ப்பாணம் அனுப்பி வைத்தார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். அவரது காலில் ஏற்பட்டிருக்கும் காயத்துக்குச் சத்திரசிகிச்சை யளிக்கப்பட்டிருக்கிறது.

இவர் எட்டுப் பிள்ளைகளின் தந்தை.

## மட்டக்களப்பில் வெள்ள...

(1ம் பக்க தொடர்ச்சி)

பகுதிகளில் வள்ளப் போக்குவரத்து நடைபெறுகிறது.

இதேவேளை பெரு வெள்ளத்திற்கு மத்தியிலும் பாதுகாப்பு படையினரின் ரோந்து தேடுதல் வேட்டை, சுற்றிவளைப்பு ஆகியவை தொடர்ந்து நடைபெறுகிறது.

நேற்றுக்காலை ரோந்து வந்த ஆயுதப்படையினரின் கனரக வாகனம் ஒனறு மட்டக்களப்புச் சந்தை வீதியில் சேற்றில் சிக்கியது.

இதேசமயம் வெள்ளம் காரணமாக மட்டக்களப்பு விமானப்படையினர் தமது முகாமிலிருந்து நகருக்கு வரமுடியாத நிலைஏற்பட்டிருக்கிறது.

இடையில் சுமைதாங்கி என்ற இடத்தில் மிகமோசமாக வெள்ளம் பாய்கிறது

## லலித்...

(1ம் பக்க தொடர்ச்சி)

இருந்தது.

தாயகம் திரும்பும் வழியில அவர் தமிழக முதலமைச்சர் திரு. எம் ஜி. இராமச்சந்திரனைச் சந்தித்து, சுமார் ஒன்றரை மணிநேரமாகப் பேசினுர்.

ஜனதிபதி ஜெயவர்த்தன வெளியூரில இருப்பதால், அமைச்சர் தொண்டமான், லலித் அத்துலத் முதலியைச் சந்திக்க ஏற்பாடாகியுள்ளது.

ஜனதிபதி கொழும்பு திரும்பியதும் திரு. தொண்டமான் அவரைச் சந்திப்பார்.

## மக்கள் இப்...

(1ம் பக்க தொடர்ச்சி)

தில் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டவர். அவரின் சேவை எமக்குத் தேவைப்படும் காலகட்டம் இது. மக்கள் அவர் பக்கமே உள்ளனர்-''

இப்படி அஸ்கிரிய பீடாதிபதி சொன்னுர்.

''இன்றைய பிரச்சினைகளைத் தெளிவாகப் புரிந்து வைத்துள்ளேன்'' என்று மட்டும் திருமதி. பண்டாரநாயக்கா பதிலளித்தார்.

## நேருக்கு...

(1ம் பக்க தொடர்ச்சி)

வேட்டுகள் தீர்க்கப்பட்டன. கடும் மோதல் நிகழ்ந்தது. இருபகுதியினரும் நேருக்கு நேர் நின்று மோதினுர்கள்.

இந்த மோதலில் படுகாயமடைந்த நான்கு படை வீரர்கள் ஹெலிக்கொப்டர் மூலம் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள்.

இந்தச் சம்பவத்தின் எதிரொலியாக அப்பகுதியில் 11 வீடுகள் எரிக்கப்பட்டன

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த ஆறு பேர் முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறுர்கள்.

பல வீடுகள் ஹெலிக்கோப்டர் சூட்டினுல் கடும் சேதமடைந்திருக்கின்றன.

அப்பகுதி மக்கள் மிரண்டுபோய், அப்பகுதியை விட்டு வெளியேறி வேறு இடங்களில் தஞ்சம் புகுந்திருக்கிறுர்கள்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷ்ரூமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட். 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 11-01-1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org